## சுருக்கம்

நினைவகம் - தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் சமாதியினை மேம்படுத்துதல் - ரூ.2.00 இலட்சம் செலவின ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## செய்தி மற்றும் சுற்றுலா (நினைவகம்)த் துறை

அரசு ஆணை (வாலாயம்) எண் 41
நாள் 7.02.2003

படிக்கப்பட்டது:

1. செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (க) கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம், தருமபுரி-5 கடித எண் 57/2ப/இவஅ.1/கோ3/99, நாள் 24.2.2000.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி கடித எண் 891/செமதொ/97, நாள் 25.1.2001.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி செயல்முறைகள் எண் 97943/98 (து3), நாள்10.10.99.

-----

ஆணை :

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் சமாதியினை மேம்படுத்தலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

2. மேலே வரிசை எண் 1ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, செய்ற்பொறியாளர், கட்டடக் கோட்டம், பொதுப்பணித்துறை, தருமபுரி அவர்கள், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் நினைவிடத்தை மேம்படுத்த ரூ.2.00 இலட்சத்தில் திட்ட மதிப்பீட்டினை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனப்பியுள்ளார். வரிசை எண் 2ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் தருமபுரி அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் நினைவிடத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.14.00 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டினை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளார்.

3. மேலே வரிசை எண் 3ல் படிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணையின்படி, தருமபுரி மாவட்டம்,

பாப்பாரப்பட்டியிலுள்ள, சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் நினைவிடம் மேம்படுத்தும் வகையில், நினைவிடம் உள்ள தருமபுரி மாவட்டம், பென்னாகர வட்டம், ஒன்னப்ப கவுண்டனள்ளி கிராமம் புல எண் 189/2டி3ல் 0.34.5 ஹெக்டேர் நிலத்தினை இத்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியிலுள்ள, சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் நினைவிடத்தினை மேம்படுத்தும் வகையில், நினைவிடம் உள்ள இடமான தருமபுரி மாவட்டம், பென்னாகர வட்டம், ஒன்னப்ப கவுண்டனள்ளி கிராமம் புல எண் 189/2டி3ல் 0.34.5 ஹெக்டேர் நிலத்தில் சுப்பிரமணிய சிவா நினைவிட மேம்பாட்டுப் பணிகளுக்காக செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம், தருமபுரி அவர்கள் அளித்திருந்த ரூ.2.00 இலட்சித்திற்கான (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டினை ஏற்று, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொதுப்பணித்துறை, சென்னை அவர்களுக்கு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2220. செய்தி விளம்பரம் - 60. ஏனையவை - 106. நேரிட விளம்பரம் - I. திட்டத்தில் சேராதது - AC. தகவல் தொடர்புக்கான திட்டங்கள் - 17. சிறு பணிகள் (த.தொ.கு.எண் 2220 60 106 AC 1705)

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளித்துள்ள செலவினத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு 2002-2003ஆம் நிதி ஆண்டின் இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கப்படும். இதற்கான செயற்குறிப்பை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்கள் நேரடியாக நிதித் துறைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். 2002-2003ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்திய திட்ட மதிப்பீட்டில் செலவினம் சேர்க்க இருப்பதைக் கருதி இச்செலவினத்திற்கான பட்டியலை அனுமதிக்குமாறு சம்மந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 4391 / செய்தி மற்றும் சுற்றுலா / 03, நாள் 29.1.2003 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண் 1191 மூலம் இசைவு அளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ. ராமதாஸ்
அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை-5
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35

செயற்பொறியாளர் (கட்டடம்) பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம்,
தருமபுரி
மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி

நகல்

நிதி (செய்தி (ம)சுற்றுலா)த்துறை, சென்னை-9
நிதி (வ.செ.பொ11)த்துறை, சென்னை-9
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு-செலவு)த் துறை, சென்னை-9
இருப்புக் கோப்புகள் / உதிரிகள்

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்